Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්



மறுக்கப்படும் உரிமைகளை பொறுப்புடன் எடுத்துரைக்க....

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரஜைகள் முன்னணி வேட்பாளர்

பூவி.எம்.ஐ.றஹ்மதுல்லாஹ்



எனது இலக்கம் 7

குடும்பத்திற்கு ஒருவர் எனக்கு வாக்களியுங்கள்!

அசாத்தியம் என்பதை சாத்தியமாக்குவோம் !

ஒளி - 01 - கதிர் - 171 . 01-10-2000 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-

# ஹிஸ்புல்லாஹ் சென்ற கார்மீது துப்பாக்கிச்சூடு மயிரிழையில் உயிர்தப்பினார்

## பாதுகாப்பு பொலிசார் மூவர் காயம்

(ஏறாவூர் நிருபர்)

**கோரகல்லிமடுவில் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பயணம் செய்த வாகனத் தொடரணி மீது இனந் தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.**

ஓட்டமாவடி றிதிதென்னப் பிரதேசத்தில் நேற்று முழுநேரம் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பிரதியமைச்சர் பிரச்சார நடவடிக்கைகளினை முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருக்கும் போது மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

பிரதியமைச்சரின் வாகனத் தொடரணி கோரகல்லிமடுவைக் கடந்து சென்று கொண்டிருக்கையில் அமைச்சரின் வாகனத்துக்கு குறுக்காக மாடுகள் செல்ல முயன்ற போது வாகனத்தின் வேகம் குறைக்கப்பட்ட நேரம் வீதி ஓரங்களில் பதுங்கி இருந்தவர்களால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இச்சம்பவத்தின் போது அப்பிரதேசத்தில் குண்டுச் சத்தம் ஒன்று கேட்டதாகவும் அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இத்தாக்குதலை முறியடிப்பதற்காக அமைச்சரின் பாதுகாப்பு வாகனத் தொடரணிப் பாதுகாப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிசாரும் மெய்பாதுகாப்பாளர்களும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து மெய்பாதுகாப்பாளர்கள் பாதுகாப்பாக முறக்கொட்டான்சேனை இராணுவ முகாமுக்கு பிரதியமைச்சரை கொண்டு வந்தனர்.

பிரதியமைச்சர் பயணம் செய்த வாகனம் குண்டு துளைக்காத



வாகனம் என்பதால் அமைச்சருக்கோ வாகனத்துக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

பிரதியமைச்சரை இலக்கு வைத்தே இத்தாக்குதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முறக்கொட்டான்சேனை இராணுவ முகாமிலிருந்து மேலதிக பாதுகாப்புடன் காத்தான்குடி சென்றனர்.

(8ம் பக்கம் . பார்க்க)

## சூறாவளி அபாயம் !

(நமது நிருபர்)

வங்காள விரிகுடாக் கடலில் ஏற்பட்டுள்ள பவன தாளமுக்க நிலை காரணமாக சூறாவளி வீசும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கால நிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

ஒக்டோபர், நவம்பர் மாத இடைப்பருவப் பெயர்ச்சி காலத்தில் வங்காள விரிகுடாவில் பவன தாளமுக்க நிலையும் சூறாவளியும் இடம்பெறும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

இதன்முன் அறிகுறியாக நாட்டின் சகல இடங்களிலும் பலத்த இடியுடன் கூடிய மழையும், பலத்த காற்றும் வீசும். எனவே முன்பாது காப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு கால நிலை அவதான நிலையப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## முன்னூறு குடும்பங்கள் வடமராட்சிக்கு இடம்பெயர்வு

(வடமராட்சி நிருபர்)

யாழ் தென்மராட்சி கிழக்கில் இருந்து சுமார் முன்னூறு குடும்பங்கள் நேற்று இடம் பெயர்ந்து கொடிகாமம், நெல்லியடி வீதியூடாக வடமராட்சிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவ்வாறு பாதுகாப்புத் தேடி வந்தவர்கள் பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி

(8ம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு மாணவன் பலி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நாவலடிக் கடலில் குளித்துக் கொண்டிருந்த பன்னிரெண்டு வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் இனந் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகி உள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது. மட்டக்களப்பு நாவலடி நாமகள் வித்தியாலய மாணவனான குணலிங்கம் குகதர்சன் என்பவரே துப்பாக்கி சூட்டுக்கு மரணமான நபராவர்.

இது தொடர்பாக மட்டக் களப்பு பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 628 வாக்காளர் அட்டைகள் மாயம்

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் இருந்து 628

(8ம் பக்கம் பார்க்க)

## வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பு

(நமது நிருபர்)

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நேற்று முன்தினம் வரை 779 ஆக அதிகரித்துள்ளது என பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 58 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகி உள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணி 19 முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 24 முறைப்பாடுகளையும், மக்கள் விடுதலை முன்னணி 06 முறைப்பாடுகளையும் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## தவறுதலாக துப்பாக்கி சூட்டுக்கு ஒருவர் காயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானச் சோதனைச் சாவடிக்கு சமீபமாக பெண் பொலிசாரின் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்த தால் பொதுமகன் ஒருவர் காயம

(8ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கு படைத்தளங்கள் மீது தொடர்ந்து தாக்குதல்

(வவுனியா நிருபர்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள படைத்தளங்கள் மீது ஓயாத அலைகள் நான்கு தொடர்வதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

கிளாலி படைத் தளத்திற்

(8ம் பக்கம் பார்க்க)


## கடற்படைப் படகுகள் மீது கடற்புலிகள் தாக்குதல்!

(யாழ் நிருபர்)

யாழ் கடற்பரப்பில் கடற்படையினரின் இரு படகுகள் கடற்புலிகளால் தாக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இத்தாக்குதலில் இரு கடற்படை வீரர்கள் காணாமல் போயுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ் மேற்கு கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தை அறிந்து தாக்குதல் நடத்த சென்ற சமயமே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.



சுயேச்சை குழு-1 இல்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில்

இரா. துரைரெட்ணம் (ரெட்ணம்) தலைமையில்

மீன் சின்னத்தில் போட்டி

3

சுயேச்சைக் குழு (1)



மீன் பாடும் தேன்நாடு வளர்ச்சி பெற மீன் சின்னத்துக்கே வாக்களிப்போம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

கிழக்கிலிருந்து வெளிவரும் முதல் தினசரி

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


# இலங்கையிலும் கூட ஒருவரில்லை

அதிகார போதையும் பதவி ஆசையும் ஒரு மனிதனை எந்த அளவுக்குக் கீழ்த்தரமாக நடக்கச் செய்து விடுகிறது என்பதற்கு இந்தியாவின் முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் ஒரு நல்ல உதாரணம்.

தடியடி பட்டவர்களும் துப்பாக்கிக் குண்டுகளை ஏந்தி மடிந்தவர்களும் சிறையில் சித்திரவதைப்பட்டவர்களும் செக்கிழுத்தவர்களும் என்று அரும் பெரும் தியாகங்கள் செய்த தலைவர்களும் தொண்டர்களும் தம்மை வருத்திப்பெற்றெடுத்துதான் இந்தியாவின் விடுதலை.

காந்தி மகாத்மா இந்திய தேசத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல இந்திய மக்களும் தேசத்துக்கு வழிகாட்டும் தலைவர்களும் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் தூய்மையாகவும் வாழவேண்டியது அவசயமென்பதை போதனை செய்தது மட்டுமல்ல வாழ்வில் சாதனையாகவும் வாழ்ந்து வழி காட்டியவர்.

காந்தி மகாத்மா விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி நிகழ்த்தினார். பதவிக்கு விரும்பியதில்லை, அதிகாரத்துக்கு ஆசைப்பட்டதில்லை.

விடுதலைக்குப் பின் நாட்டை வழிநடத்திச் செல்லும் பொறுப்பை காந்தியின் வாரிசு பண்டித ஜவகர்லால் நேரு ஏற்றார். இருபத்திநான்கு மணிநேரமும் தேசத்தின் வளர்ச்சியைப்பற்றியே சிந்தித்து செயலாற்றினார்.

நேருவின் அமைச்சரவையிலும் நரசிம்மராவ் அங்கம் வகித்திருக்கிறார்.

நேருவின் மறைவுக்குப்பின் நாட்டை வழிநடத்தி செல்வதற்காக பிரதமர் பதவியை ஏற்ற லால்பகதூர் சாஸ்திரி காந்தியின் வழிநடந்த உண்மையான சீடர். எளிமையே உருவானவர். பிறர் துன்பம் காணச்சகிக்காதவர்.

நாட்டின் நிரந்தர அமைதிக்கு வழிகாண எடுத்த முயற்சியின் போது ரஷ்யாவில் அவர் உயிர் பிரிந்தது.

காந்திக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் நேருவின் மகள் இந்திரா காந்தி துணிச்சலான நடவடிக்கை எடுப்பதற்கும் பெயர் பெற்றவர். இதனால் எதிர்ப்பை வலுவில் தேடிக்கொண்டார்.

இந்தியாவின் பெயரை உலகில் நிலை நிறுத்தியவர். உலகில் எந்த மூலையில் எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் சோதனை ஏற்பட்டாலும் நேரு என்ன சொல்கிறார் என்று உலகம் எதிர்பார்த்திருந்ததைப் போலவே இந்திரா என்ன சொல்கிறார் என்று காத்திருந்தது.

பாகிஸ்தானில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட சமயத்திலும் அங்கு ஜனநாயக உரிமைகள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு மறுக்கப்பட்ட சமயத்திலும் இந்தியாவுக்குள் ஒரு கோடி கிழக்கு பாகிஸ்தானியர்கள் அகதிகளாக தஞ்சம் அடைந்த போது அமெரிக்காவும் மற்றும் சில நாடுகளும் அகதிகளுக்கு உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்கவே முன்வந்தன.

அகதிகளுக்கு நிவாரணம் தேவையில்லை கிழக்கக்குப் பாகிஸ்தான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்காண்பதே அவசியம் என்று இந்திரா சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைத்தார். இதற்கும் அமெரிக்காவோ வேறு இதர நாடுகளோ செவிசாய்க்கவில்லை.

கிழக்குப் பாகிஸ்தானின் விடுதலைப் போராட்டத்துக்கு இந்திரா ஆதரவாளித்தார். கிழக்குப் பாகிஸ்தான் சுதந்திர வாங்காள தேசமாக விடுதலைபெற்றது.

இலங்கையில் 83ஆம் ஆண்டில் தேசியத் தமிழ்ச்சிறு பான்மை இனத்துக்கு எதிராக இனவெறி ஏவி விடப்பட்டு தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இந்தியா உதவிக்கு தயார் என்று இந்திரா குரல் கொடுத்தார். ஜே.ஆர் அச்சமடைந்து நடவடிக்கை எடுப்பதாக பாசாங்கு செய்தார். இந்திரா படுகொலைசெய்யப்பட்டதும் இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுக்க யாருமில்லாமல் போய்விட்டது.

இந்திராவின் பின் ஆட்சிக்கு வந்த ராஜீவ் ஜே.ஆரின் கைப்பொம்மையானார்.

ராஜீவின் மறைவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த நரசிம்மராவ் இலங்கைத்தமிழர் நிலைய்ய நன்கு அறிந்திருந்தும் தமது பதவிக்கும் அதிகாரத்துக்கும் எந்த வழியிலும் எங்கிருந்தும் பிரச்சினை வந்து விடக்கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காக நீதி நியாயம் எல்லாவற்றையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு அநியாயத்திற்கே ஆதரவாக இருந்தார்.

நரசிம்மம் என்ற பெயர் வைத்திருந்தாலும் நியாயத்துக்கும் நீதிக்கும் வாதாடாமல் தமது பதவியையும் அதிகாரத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக தேச நலனையே மறந்து லஞ்சத்தையும் ஊழலையும் வளர்த்தார்.

ராஜாஜிநாதன் பால ராதாகிருஸ்ணர், நேரு லால்பக்தார், இந்திரா வழிவந்த இந்திய தலைவர்களுக்கு நரசிம்மராவ் அவமானத்தையே தேடித்தந்திருக்கிறார்.

இன்று தண்டனைக்குரிய குற்றவாளியாக நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.நரசிம்மராவுக்காக இரக்கப்படுவதற்கு இன்று இலங்கையில் கூட ஒருவர் இல்லையே.

# நாளைய தலைவர்களான இன்றைய சிறுவர்கள் அனுபவிக்கும் துயரங்கள்

## இன்று சர்வதேச சிறுவர் தினமாகும் அதனை முன்னிட்டு இக்கட்டுரைகள் பிரசுரமாகின்றது

1952ம் வருடம் அரசு சார்பற்ற நிறுவனமான சர்வதேச சிறுவர் நலன் சங்கம்(IUCW) எனும் அமைப்பால் சிறுவர் தினம் முன்மொழியப்பட்டது. இதை அடியொற்றி 1953ம் வருடம் ஒக்டோபர் மாதம் 01ம் திகதி முதலாவது சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் சுமார் 40 நாடுகள் பங்குபற்றின. 1954ம்வருடம் ஐ.நா.பொதுச் சபையின் முடிவின்படி சர்வதேச சிறுவர் தினத்தினை அமுல் நடத்தும் பாரிய பொறுப்பு UNICEFஅமைப்பிடம் கொடுக் கப்பட்டது. இதன் அடிப்படையில் UNICEF, UNESCO,SAVE THECHILDஎன்ற அமைப்புக்கள பலசெயற்திட்டங்களை முன்வைத்து இயங்கி வருகின்றன.

உலக சனத்தொகையில் கனிசமான அளவினர் சிறுவர்கள் ஆவர். 1939இன் இலங்கை சிறுவர் சாசனப்படி சிறுவர், இளைஞர் கட்டளைச்சட்டமானது சிறுவர் என்பவர் 14 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களே என்று வரையறுத்துள்ளது.

UNICEF அமைப்பின் 1996ம் வருட அறிக்கையின்படி உலகில் 14 வயதுக்குக் கீழ் 250 மில்லியன் சிறுவர்கள் கடின உழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறிருக்க. 14 வயதுக்குக்கீழ்உள்ள சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக இலங்கையிலும் பல்வேறு சட்டங்கள்உருவாக் கப்பட்டிருக் கின்றன. இருந்த போதிலும் இங்கு சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் தெருவோரத்தில் வாழ்க்கை நடத்துவோராக இருக்கின்றனர். இது போன்ற காரணங்களால் விரக்தியுற்ற நிலையில் அச்சிறுவர்கள் இளம் குற்றவாளிகளாகவும், துர்நடத்தையுடையவர்களாகவும் மாற வேண்டிய நிலைக்குத்தள்ளப்படுகின்றனர்.

மற்றுமொரு அறிக்கையின் படி சுமார் 05 இலட்சத் திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் உள்நாட்டுப் போர் காரணமாக நிர்க்கதிக் குள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும் இவற்றோடு சிறுவர்களை ஆயுதப் போரிலும் ஈடுபட வைக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 250,000 சிறுவர்கள் உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் யுத்தங்களில் இளம் போர் வீரர்களாக ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இது தொடர்பாக ஐ.நா.வின் விஷேட பிரதிநிதி அலுவலகம் விடுத்துள்ள தகவலின்படி கடந்த 10 வருடங்களில் மாத்திரம சுமார் 20 இலட்சம் சிறுவர்கள் போர் நடவடிக்கைகளின் காரணமாகக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிகின்றது.இப்படியாக சிறுவர்களைஆயுதப்போரில் ஈடுபடுத்துவது தொடர்பாக ஐ.நா.வின் விசேட பிரதிநிதியான ஒலாறா ஒட்டுனு 1998ம் வருடத்தின் முற்பகுதியில் "இலங்கைக்கு விஜயம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதனை ஒரு போர்க்குற்றமாகக் கருத வேண்டும் என்று UNICEF அமைப்பு ஆலோசனை வழங்கியுள்ளது.



தாண்டவன்வெளிச்சந்திக்கு அருகேயுள்ள பஸ் தரிப்பிடத்தில்.தினமும் காணப்படும் இந்தத் தளிர் உங்கள் கண்களுக்கு உறுத்தவில்லையா? (படம் ஷான்)

சிறுவர்களின் சமகாலப் பூதாகரமான பிரச்சினையாக மறுபுறம் காணப்படுவது சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமாகும். அதிலும் பிரதானமாக "கடற்கரைச் சிறுவர்" என்ற பெயரில் இவர்கள் அந்நிய நாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு விற்கப் படுகின்றனர்.UNICEF அமைப்பின் கணிப்பின் படி 14வயதுக்குக் கீழ்பட்ட சுமார் 30,000 சிறுவர்கள் கடற்கரைப்பிரதேசங்களில் தன்னினச் சேர்க்கைக்காக ஈடுபடுத தப்பட்டுளளனர். என்பதனைக் கேள்விப்படும்போது உள்ளம் கொதிக்கின்றது. இவ்வாறான நடவடிக்கை மூலம் AIDS என்னும் பயங்கர நோய்க்கும் அதன் பரம்பலுக்கும் இச்சிறுவர்கள் ஒரு ஊக்கியாகப் பயன்படுகின்றனர். என்றால் அதில் மிகை எதுவுமில்லை என்றே கூறலாம்.

இன்றைய நிலையில் சிறுவர்கள்பல அச்சுறுத் தல்களையும் அபாயங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். அவர்களின் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் உள்ளன

ஐ.நா.பொதுச்சபையில் 1989ம் வருடம் கொண்டு வரப்பட்ட சிறுவர் உரிமைச் சாசனத்தின் படி குல, நிறை, பால், மொழி, சமய, அரசியல், தேசியம், சமூகம், செல்வம் மற்றும் இயலாமை என்ற எவ்வித வேறுபாடுகளுமின்றி 18 வயதுக் குக்குறைந்த சிறுவர் களின் உரிமைகளுக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, வருடா வருடம் சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுவதோடு நின்று விடாமல் அவர்களது முழு உரிமைகளையும் அவர்களுக்கு வழங்கி அவர்களையும் உலகில் வாழ்கின்ற நற்பிரஜைகளுள் உள்ளவர்களாக ஆக்குவதற்கு முற்பட்டு உழைக்க வேண்டியது ஒவ்வொருவரதும் பிரதான கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில் இன்றைய சிறார்கள் தான் நாளைய தலைவர்கள் என்பதை யாரும் மறுப்பதற்கு முடியாதல்லவா?

**அமானுல்வாஹ் ஏ.மஜீத்**
**மருதமுனை**

# சிறுவரின் எதிர்கால முன்னேற்றத்துக்கு கல்வி தான் ஒரே வழி

இன்றைய நவீன யுகத்தில் மனித உரிமைகள் தினம், உலக சமாதான தினம், ஐ.நா.சபை தினம், உலக சுகாதார தினம், சூழல் பாதுகாப்பு தினம், எயிட்ஸ் தினம், உலக சனத்தொகை தினம், உலக உணவு தினம், உலக தொழிலாளர் தினம், ஆசிரியர் தினம், குடியிருப்புக்கள் தினம்எனப்பல்வேறு வகைப் பட்ட தினங்கள் கொண்டாடப் படுகின்றது.

இவற்றிலே முதன்மையான தினமாக உலக சிறுவர் தினம் ஒக்டோபர் 1ஆம் திகதி(இன்று) உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

இன்றைய தினத்திலே சிறுவர்களின் உரிமைகள் எவ்வாறு பேணப்படுகின்றது. என்பது பற்றி ஆராய்வது சாலப்பொருத்த மானதாக அமையுமல்லவா?

பொது ஜன ஐக்கிய முன்னணிஅரசாங்கம் பதவியேற்றதிலிருந்து "கட்டாயக்கல்வி" பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறது. ஊரில்உள்ளசமூர்த்தி ஊக்குவிப் பாளர்கள், கிராமசேவகர் ஊடாக 6-14வயதுக்குட்பட்ட எவராவது பாடசாலை செல்லாது இருந்தால் அவர்களை பாடசாலை செல்ல ஊக்குவிக்க வேண்டும். என கேட்டிருந்தது. ஆனால் இன்று என்ன நடந்தது? எல்லாமே பேச்சளவில் தான் என்பது புலனாகின்றது அல்லவா?



ஆறுதலாய் தாயின் தோள்சாயும் வயது. வயிற்றுப் பசிக்காக பாரம் இழுக்கின்றது

வறுமை நிலையில் வாழும் மக்கள் தமது பிள்ளைகளை வீட்டுவேலை செய்யவென தனவான்களிடம் ஒப்படைக்கின்றனர். அங்கே தமது பிள்ளைகள்படும் துயர்களை எண்ணிப் பார்க்க மறந்து விடுகின்றனர். தமது பிள்ளைகள் தமக்கு பணம் அனுப்பினால்

(4ம் பக்கம் பார்க்க)

# மாஜி இந்தியப்பிரதமர் நரசிம்மராவுக்கு லஞ்சம் கொடுத்த வழக்கில் தண்டனை

புதுடில்லி, டிசப். 30- 1991-ம் ஆண்டு நடந்த மக்களவை பொதுத்தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அதிக இடங்களை காங்கிரஸ் கைப்பற்றி இருந்தது. அதையடுத்து நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் சிறுபான்மை அரசு பதவி ஏற்றது.

1993-ம் ஆண்டு நரசிம்மராவ் அரசு மீது மக்களவையில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கை யில்லா தீர்மானம் கொண்டு வந்தன. அதே ஆண்டில் ஜுலை 28-ந்தேதி நம்பிக்கையில்லா தீர்மானம் மக்களவையில் தோற்கடிக்கப்பட்டு அரசு தனது பெரும்பான்மையை நிருபித்தது. காங்கிரஸ் பலத்தை விட அரசுக்கு கூடுதலாக 14 வாக்குகள் கிடைத்தன.

**லட்சம் லட்சமாக லஞ்சம்**

சிறுபான்மை பலத்துடன் இருந்த நரசிம்மராவ் அரசுக்கு பெரும்பான்மை பலம் கிடைத்தது எப்படி என்பது பற்றிய தகவல் பரபரப்பாக வெளியாகியது. ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் 4 எம்.பிக்கள் மற்றும் அப்போதைய ஜனதாதளம் கட்சியை பிளவுபடுத்தி அஜித்சிங் தலைமையிலான கோஷ்டி எம்.பிக்கள் ஆகியோருக்கு பல லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுத்து அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க செய்ததாக புகார் கூறப்பட்டது. இந்த புகாரை சி.பி.ஐ. விசாரித்து 1996 மற்றும் 97-ம் ஆண்டுகளில் தனிக்கோர்ட்டில் 3 குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

**அப்ருவர் சாட்சியம்**

குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான சைலேந்திர மகாட்டோ என்ற எம்.பி. அப்ருவராக மாறி தங்கள் கட்சியைச் சேர்ந்த 4 எம்.பி.க்களுக்கு தலாரூபா.50 லட்சம் தரப்பட்டதாக சாட்சியம் அளித்தார். பின்னர் எம்.பிக்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு வாக்களித்தாலும், பாராளுமன்றத்தில் அவர்களது நடவடிக்கை பற்றி குற்றம் சாட்ட சட்டத்தில் இடம் இல்லை என்பதால் குற்றம் சாட்டப்பட்ட 9 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

**11 பேர் மீது வழக்கு**

இறுதியாக முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், முன்னாள் மத்திய மந்திரிகள் பூடாசிங், சதிஷ்சர்மா, அஜித்சிங், அரியானா முன்னாள் முதல்வர் புன்லால், கர்நாடக முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லி கர்நாடக முன்னாள் மந்திரிகள் ரேவண்ணா, ராம லிங்கரெட்டி கர்நாடக சாராய ஆலை அதிபர் ஆதிகேசவலு, எம்.திம்மேகவுடா முன்னாள் ராஜ்யசபை உறுப்பினர் ராஜேஸ்வரராவ் ஆகிய 11 பேருக்கு

**வழக்கு நடந்தது ராவ் குற்றவாளி**

3 வருடங்களான வழக்கு விசாரணை நடந்தது. நரசிம்ம ராவ் உள்பட குற்றம் சாட்டப் பட்ட அனைவரும் கோர்ட்டுக்கு வந்து சாட்சியம் அளித்தனர். இந்த வழக்கில் கடந்த மே மாதம் 30-ந் தேதியுடன் விசாரணை முடிவடைந்தது. நேற்று தனிக் கோர்ட்டு நீதிபதி அஜீத் புகாரிகோ தனது பரபரப்பான தீர்ப்பை அளித்தார்.

முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், முன்னாள் மத்திய மந்திரி பூடாசிங் ஆகிய இருவரும் கிரிமினல் சதி,ஊழல் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அஜீத்சிங் நரசிம்மராவ் உறவினர் ராஜேஸ்வரராவ் உட்பட மற்ற 9பேரும் சந்தேகத்தின் அடிப் படையில் விடுதலை செய்யப் பட்டார்கள்.

**எத்தனை ஆண்டு ஜெயில்,**

குற்றவாளிகளான நரசிம்ம ராவ், பூடாசிங் ஆகியோருக்கு எத்தனை ஆண்டு ஜெயில் என்பது அக்டோபர் 11-ந்தேதி அறிவிக்க ப்படும். 11-ந்தேதி இது பற்றி விவாதம் நடத்தப்படும் என்று நீதிபதி அஜீத் பகாரிகோ அறிவித்தார்.




## பொறுமைக்கும் எல்லையுண்டு வீரப்பன்

(சென்னை)

தடாக்கைதிகளின் விடுதலையை ஒவ்வொரு காரணம் சொல்லி தள்ளிப்போட்டுக்கொண்டு வருகின்றார்கள். இது நல்லதற்கல்ல. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. எமது பொறுமையை அதிகம் சோதிக்க வேண்டாம் என்று சொல்லுங்கள் என்று சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறனுக்கு அனுப்பிவைத்த ஒரு ஒளிப்பேழையில் தெரிவித்துள்ளார்.



தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் விடுதலை வீரருமான நெல்சன் மண்டேலா பிரிட்டிஷ் பிரதமர் ரோனிபிளையாரை பிரிட்டிஷ் தொழிற்கட்சி மாநாட்டில் ஆரக் கட்டித் தழுவிய போது எடுத்த படம்

# வீரப்பனிடம் இருந்து தப்பியது பற்றி நாகப்பன் விளக்கம்

பெங்களூர், செப். 30- வீரப்பனிடம் இருந்து தப்பி வந்த சினிமா உதவி இயக்குனர் நாகப்பா பெங்களூரில் நேற்று கர்நாடக முதன்மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணாவை சந்தித்து பேசினார். பிறகு வீரப்பனிடம் இருந்து தப்பியது எப்படி, என்பது குறித்து முதன்மந்திரி முன்னிலையில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்பொது அவர் பரபரப்பு தகவல்களை வெளியிட்டார். அவர் கூறியதாவது- கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு காட்டில் ராஜ்குமார் மற்றும் அவருடன் கடத்தப்பட்ட நான் உள்ளிட்ட 3 பேரும் வீரப்பன் மற்றும்



அவனது ஆட்களும் படுத்து தூங்கிக் கொண்டிருந்தோம். அப்போது நான் மட்டும் எழுந்தேன். அப்போது மற்றவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். உடனே நான் தப்பி ஓட தொடங்கினேன். அப்பொது நள்ளிரவு 2 மணி இருக்கும்.

சிறிது நேரம் நான் ஓடி சென்றேன். அப்போது வீரப்பன் ஆட்களில் ஒருவன் என்னை வழிமறித்தான். அவனோடு நான் கட்டிப் புரண்டு சண்டை போட்டேன். இதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. வீரப்பனின் ஆளை அடித்து போட்டுவிட்டு நான் மீண்டும் தப்பி ஓடினேன்.

# கருணாநிதி மூப்பனாரை ரஜினி இணைக்க வேண்டும்

(சென்னை, செப். 30-) மூப்பனார் இப்போது போய் சேர்ந்துள்ளது ஒரு ஆபத்தான இடம். விரைவில் அவர் கலைஞரின் அன்பு பாசறையில் வந்துசேர ஸுப்பர் ஸ்டார் ரஜினி முயற்சி எடுக்க வேண்டும். இதற்காக நான் பிரார்த்திக்கிறேன்.

5 ஆண்டுகளுக்கு முன் ஜெயலலிதாவின் கொடுர ஆட்சியை அகற்றுவதற்கு எடுத்த முயற்சியைவிட மீண்டும் தப்பித் தவறி அந்த ஆட்சி வராமல் தடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் இப்போது வந்திருக்கிறது. அன்றுபோல் இன்றும் டாக்டர் கலைஞரும், மூப்பனாரும், ஷுப்பர் ஸ்டாரும் இணைந்து தமிழ கத்தை காப்பாற்ற முன் வர வேண்டும். கலைஞர், மூப்பனார் போன்றவர்களிடையே விரிசல் ஏற்படுவது நாட்டிற்கு நல்லதல்ல. இரண்டு யானைகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டால் புல்லுக்கும் செடிகளுக்கும் தான் பாதிப்பு என்று ஆப்பிரிக்க பழமொழி ஒன்று உண்டு. ஆயிரம் காரணங்கள் இருந் தாலும் அவற்றை மன்னித்து, மறந்து ஜெயலலிதா ஆட்சி மீண்டும் தலைதூக்காமலிருக்க நாட்டிலுள்ள நல்லவர்கள் ஓரணியில் மீண்டும் ஒருங்கிணைய வேண்டும் என்று பேராயர் எஸ்.ந.சற்குணம் கூறினார்.

# சவூதியில விஷக்காய்ச்சல ஒரு வாரத்தில் 30 பேர் மரணம்

(ரியாத்)

சர்வதேச மருத்துவ நிபுணர்கள் அரேபியாவின் ஒரு பகுதிக்கு ஏமகன் நாட்டுக்கு விரைந்துள்ளனர். அரேபியாவில் திடீரென ஏற்பட்ட விஷ காய்ச்சல் அங்கு ஏராளமானோர் பலியாயினர். இரு நாடுகளும் மரண எண்ணிக்கை 60 முதல் 65 வரை என்று அறிவித்துள்ளனர். மேலும் சிலர் மருத்துவமனையில் உள்ளனர். என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நோய்க்கு இலக்கான 148 பேர் இது வரை கண்டறியப் பட்டுள்ளனர் என்று சவுதி அரசு தெரிவித்துள்ளது.


கடந்த வாரத்தில் மட்டுமே 30 பேர் மரணமடைந்தனர் என்றும் 21 பேர் சுகமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கெய்ரோவை மையமாக கொண்டு இயங்கும் உலக சுகாதார மையம் தனது நிபுணர்களை ஏமன் சவூதிக்கு அனுப்பி உள்ளது. அவர்கள் காய்ச்சல் பரவியுள்ள இடங்களில் சாம்பிள்களை சேகரித்து சென்றுள்ளனர். சவுதி விவசாய அமைச்சர் அப்துல்லா பின் அப்துல் அஜீஸ் பின் முஅம்மர் இத் தகவல்களை பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். இதந்த குழு தனது பணிகளை 10 நாட்களில் முடிக்க திட்டமிட்டுள்ளது.

## தென்னாபிரிக்க மாகாணமென்றில் கொலரா நோயாளர்கள் தீவிரம்

தென்னாபிரிக்காவின் வாஸீலுநேட்டால் மாகாணத்தில் திடீரென காலரா நோய் வெகு வேகமாக பரவி வருகின்றது. இதில் 13 பேர் கொல்லப்பட்டு விட்டனர். கடந்த வாரம் சுமார் 1000 பேர் இந்த வயிற்றுப் போக்கு நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நோய்க்கு ஒரு வகை வைரஸ்தான் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த அவலம் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இது தவிர மேலும் கிராமப்புறங்களில் பரவாமல் இருக்க மருந்து மாத்திரைகளுடன் குழுக்கள் விரைந்துள்ளன. தண்ணீரில் இருந்து தான் இந்நோய் பரவியுள்ளதாகவும், அங்கு பாயும் நதி ஒன்றில் ஏற்பட்டுள்ள அசுத்தமும் இதற்கு காரணமாக இருக் கூடும் என்றும் தெரிய வந்துள்ளது.







சமாதானத்தின் பெயரால் உரிமை சாகடிக்கப்படக்கூடாது.
உரிமையின் பெயரால் சமாதானம் வாழவைக்கப்பட வேண்டும்.

பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தேசிய ஐக்கிய முன்னணி

# கிளிநொச்சி வைத்தியசாலையில் 28 நாட்களுக்குள் 25 குழந்தைகள் மரணம்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 8 மாதங்களில் பிறந்து 28 நாட்களுக்குள் 25 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மேற்படி காலப் பகுதியில் தொளாயிரத்து எழுபது பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளதுடன் 28 நாட்களுக்கு மேற்பட்டதும் ஒரு வயதுக் குட்பட்டதுமான 7 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதே வேளை மன்னார் மாந்தை மேற்கு மாவட்டத்தில் மக்கள் மருத்துவ சுகாதார வசதிகள் அற்ற நிலையில் தொற்று நோய்த் தாக்கத்தினாலும் போசாக்கு குறைபாட்டினாலும் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள்.

இந்த பகுதியில் இயங்கி வந்த ஒரேயொரு மருத்துவமனையான வெள்ளாங்குளம் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கடந்த 3 மாதங்களுக்கு மேலாக விடுப்பில் சென்றிருப்பதால் நோயாளிகள் பெரிதும் சிரமங்களை எதிர் நோக்கியிருப்பதுடன் இப்பகுதிக்கான மருந்துகளும் அனுப்பி வைக்கப்படாமல் உள்ளன. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக் குட்பட்ட ஊழியர்களாகிய மருத்துவமாது பொது சுகாதார பரிசோதகர்கள் எவரும் நியமிக்கப்படாமையால் தாய் சேய் கவனிப்பும் சுகாதார நிலையும் மிகவும் மோசமாக காணப்படுகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். போசாக்குக் குறைபாடும் இங்கு அதிகமாக காணப்படுகின்றது. அத்துடன், திரிபோசா போன்ற சத்துணவுகள் சீராக அனுப்பி வைக்கப்படாமையால் கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இம் மக்களின் துயரை குறைக்கும் முகமாக சுகாதார துறையினர் இப்பகுதியின் ஒரேயொரு வைத்தியசாலையான வெள்ளாங்குளம் வைத்தியசாலையை தற்காலிகமாக மீள இயக்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவரின் எதிர்கால முன்னேற்றத்திற்கு..........2ம் பக்க தொடர்ச்சி

போதும் என்ற மனப்பான்மையோடு செயற்படுவது வேதனையளிக்கும் செயலாக அமைந்துவிடுகின்றது.

உலகிலுள்ளபல நாடுகளில்சிறார்கள்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்படுவது வேதனை தரும் செயலாகும். கல்வி கற்க வேண்டிய இளம் பராயத்தில் தமது வாழ்வை சீரழிக்கும்நிலை காணப்படுகின்றது. அங்கு அவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்.

கிராமப் புறங்களில் உள்ள சிறார்கள் பலர் கல் உடைக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு மனம் வெதும்புகின்றது.இதன் காரணமாக பல்வேறு உளவியல் ரீதியானதாக்கத்திற்கு உள்ளாக்கபடுகின்றனர். கல்வி கற்க வேண்டியவயதில்கல் உடைப்பது வறுமையின் காரணத்தினாலேயாகும்.இன்று சிறார்களாக இருக்கும் இவர்கள் நாளை ஜனாதிபதியாகவோ, சட்டத்தரணியாகவோ, வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ, விஞ்ஞானியாவோ, தொழில் நுட்பவியலாளராகவோ, தாதிகளாகவோ பரிணமிக்கும் நிலை காணப்படுகின்றது.

பல கிராமவாசிகள் தமது வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய தமது சிறார்களை காடுகளுக்குச் சென்று விறகு எடுத்து வந்துவிற்கும் செயலில் ஈடுபடுத்துகின்றனர். இதன் காரணமாக அவனது இளமைக் காலத்தில் கல்வி கற்கும் சூழல் வீணடிக்கப்படுகின்றது. இவ்வாறு விறகுகளை துவிச்சக்கர வண்டியில் கட்டி பல மைல் தூரம் சென்று விற்று வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இச் சிறார்கள் உள்ளாக்கப்படுவது வேதனை தருகின்றதல்லவா?

இளம் பராயத்திலே சிறுவர்கள் போதைவஸ்து பாவனைக்கு உட்படுகின்றனர். தமது பெற்றோரின் கவலையீனம் காரணமாக கல்வி கற்க வேண்டிய வயதில் வாழ்வைச் சீரழிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதன் தாக்கத்தினால் பல்வேறு நோய் ஏற்பட்டுவாழ்வு சீரழிக்கப்படுகின்றது.

உல்லாசப் பயணிகள் சுற்றுலாவின் பொருட்டு பல்வேறு நாடுகளுக்கும் செல்கின்றனர். இவர்கள் "ஹோட்டல்களில்" வேலை செய்யும் சிறுவர்களைப் பல்வேறு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவதாக அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து தெரியவருகின்றது. இவற்றின் காரணமாக பல்வேறு உளவியல் ரீதியான தாக்கத்திற்கும் உள்ளாகின்றனர்.

இன்றைய கல்வித் திட்டத்தில் புதிய கல்வி மறுசீரமைப்பு செய்யப்பட்டு மாணவர்களுக்கு விளையாட்டு மூலமானகற்பித்தல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அன்று ஆசிரியர் வகுப்பில் "கம்புடன்" சென்ற நிலைமாறி மாணவரை மையப்படுத்தி வரவேற்று பாட்டு, விளையாட்டு மூலம் கற்பிக்க வேண்டும்என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாட்டின் மூலம் மாணவர்கள் கல்வி கற்க முன்வரும் நிலை உருவாகும்.அத்தோடு சிறுவர்களைபாடசாலைக்கு செல்வதற்கு ஊக்குவிக்கக் கூடிய பல்வேறு செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடவேண்டும்.

சிறுவர்கள் கல்வி கற்பதன் மூலம் எதிர்கால சமுதாயம் ஒரு முன்னேற்றகரமான நிலையில் செயற்படுவது திண்ணம்.

## பெரியபோரதீவு ஆலய உற்சவம்!

(வெல்லாவெளி நிருபர்)

பெரிய போரதீவு, முனைத்தீவு, பட்டாபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அலங்கார உற்சவம் நேற்று (சனிக்கிழமை) திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 11ஆம் திகதி இடம் பெறும் தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவு பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் சீ.இராஜேந்திரன் தெரிவித்தார்.

ஒக்டோபர் 10ஆம் திகதி திருக்குளிர்த்தி வைபவம் இடம் பெறும். அன்றைய தினம் கலை நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நியூ ஈஸ்டன் பஸ் கொம்பனியின் களுவாஞ்சிக்குடி பஸ் டிப்போ ஆலய உற்சவத்தை முன்னிட்டு உற்சவ காலங்களில் விஷேட பஸ் சேவையினை நடத்தவுள்ளது.


## இதுவரையில்.......

எமது வாழ்வில் எத்தனையோ மனிதர்களை நாம் பரந்த அளவில் குறுகிய காலத்திற்குள் பார்த்திருக்கிறோம். சிலர் வாழ்கின்ற காலங்களில் தானும் வாழ்ந்து மற்றவர்களுக்கும் வாழ இடமளித்து தனக்கு முடியுமான நேரங்களில் ஏனைய மக்களுக்கும் உதவிகளைச் செய்த வண்ணமுள்ளார்கள்.அந்த வகையில் இவர் ஆதம்லெப்பை மீரா மொஹிடீன் – யாசிம் பாவா பாத்துமா பீவி ஆகியோரது புதல்வரில் ஒருவராக 1952.07.28 இல் சாய்ந்தமருதில் முகமது முஸ்தபா பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை கல்முனை சாஹிறாக் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியினை வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியினை கொழும்பு றோயல் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். றோயல் கல்லூரியில், கடேற், சாரணர்குழு போன்றனவற்றின் உறுப்பினராகவும், மாணவர் பேரவைத் தலைவராகவும் விளங்கினார். பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான இளமான கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டதுடன், பல்கலைக்கழகத்தினில் கற்றலோடு மாத்திரம் நின்று விடாது ஏனைய புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். அத்துடன், விஞ்ஞான மாணவர் பேரவைப் பொருளாளரகவும், முஸ்லிம் மஜ்லிஸ் தலைவராகவும் திகழ்ந்தார். வளாக வாழ்க்கை இவரது ஆளுமைகளை விருத்தி செய்யவும், தலைமைத்துவப் பண்பினை அபிவிருத்தி செய்யவும் உதவிற்று. இவர் கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளர் சங்கத்தில் உறுப்பினராவார். அத்துடன் துருக்கியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள சர்வதேச முஸ்லிம் வியாபார ஒன்றியத்தில் செயற்குழு உறுப்பினரும்,அத்துடன் இணைக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் வியாபார ஒன்றியத்தின் தலைவரும் ஆவார். தனது தொழிற்துறையினை கணக்கீட்டாளராக ஆரம்பித்ததுடன் குறுகிய காலத்தில் ''மையோன் கம்பனிகள் குழு'' என்ற பெயரில் தனது சொந்த வியாபாரத்தினை ஆரம்பித்தார். இவர் ''மயோன் கொம்பனிகள் குழு'' வினை ஆரம்பித்த நாள் முதல் மக்கள் இவரை மையோன் முஸ்தபா என்று அன்போடு அழைக்கலாயினர்.

1982இல் கணனிக் கல்வி நிலையங்களை உருவாக்கும் எண்ணம் இவருக்கு உருவெடுத்தது. 1982 இல் கொழும்பில் மையோன் கணணிக் நிலையத்தை ஆரம்பித்தது மட்டுமல்ல, திகாமடுல்ல மாவட்டத்தில் கணணிக் கல்வி அறிமுகமில்லாத ஒரு காலகட்டத்தில் கண்ணியை அறிமுகப்படுத்தியதோடு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அதனை விஸ்தரித்தார். செல்வந்தவர்களுக்கு மட்டும் சொந்தமாகயிருந்த கணணிக் கல்வியினை, ஏனைய வறிய மாணவர்களும் அடைய வேண்டும் என்ற அவா இவருக்கு எழுந்தது. அதனடிப்படையில் ஆண்டுதோறும் திறந்த போட்டிப் பரீட்சையொன்றினூடாக மாணவர்களை தெரிவு செய்து அதிலே அதி விசேட சித்தி பெற்ற 1000 பேருக்கு எந்தவித பணக் கொடுப்பனவுமின்றி கற்பதற்கு இலவச புலமைப் பரிசில் திட்டத்தினை அறிமுகம் செய்தார். இதுவரை, மையோன் நிறுவனத்தில் 45,000க்கும் அதிகமான மாணவ, மாணவிகள் புலமைப் பரிசில் பயிற்சியினைப் பெற்றுள்ளார்கள்.

மையோன் கணணிக் கல்வி நிறுவனத்தினால் கணிசமானளவு இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருப்பதோடு, இன ஒற்றுமைக்கு வித்திடப்பட்டதுடன், பொருளாதாரப் பிரச்சினையும் நீங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர கடந்த 20 வருடங்களாக இயங்கி வருகின்ற மையோன் வெளிநாட்டு பயண முகவர் நிலையம் மூலம் ஏராளமானவர்கள் மத்திய கிழக்கு மற்றும் ஏனைய நாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்பினை பெற்ற வருகின்றார்கள். இவற்றோடு மட்டுமல்ல, பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், சமூக சேவை நிறுவனங்கள் பலவற்றுக்கும் தன்னால் முடியுமான உதவிகளை அவ்வப்பொழுதுகளில் இன்முகத்தோடு செய்து கொண்டிருக்கின்றார். முன்னாள் பாராளுமன்ற அங்கத்துவர் எம்.சி.அகமட் அவர்களின் புதல்வியினை இல்லற வாழ்வில் இணைத்துக் கொண்ட இவர் நல்லதொரு அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்தில் வளர்ந்தவர். சிறீலங்கா காங்கிரஸின் வேட்பாளராக 1994 இல் நின்று 25000க்கும் அதிகமான வாக்குளைப் பெற்றதுடன் திகாமடுல்ல மாவட்டத்தில் 02 பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட வேளையில் 03வது பிரதிநிதியாக இவர் இருந்தார்.

பின்னாட்களில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளராக செயற்பட்டதுடன், முஸ்லிம் காங்கிரஸின் அங்கத்துவ பொர் பட்டியலை கணணி மயப்படுத்திய பெருமை இவரைச் சாரும். கடந்த காலத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறி, அரசியலிருந்து ஒதுங்குவதற்கு மையோன் முஸ்தபா நினைத்தாலும் மக்கள் இவரை விட்டு வைக்கவில்லை. பாராளுமன்றத்தினூடாக திகாமடுல்ல மாவட்டத்திற்கு சேவையாற்ற வேண்டுமென்பது மக்களின் கனவாக இருந்தது. ஐ.தே.கட்சி தலைமைப்பீடம் மையோன் முஸ்தபாவை தங்களுடைய கட்சியில் சேர்ந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தது. அவர்களின் கோரிக்கையினைக்கூட நிதானமாக ஆராய்ந்து பார்த்ததுடன் தான் ஐ.தே.க.வில் சேர்வதானால் இந்தப் பொதுத்தேர்தலில் 02 சிங்களப் பிரதிநிதிகள் மாத்திரம் போட்டியிட வேண்டும் என்றும் அத்துடன் ஐ.தே.க.தேசியப் பட்டியலில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடமளிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். இவரது கோரிக்கையை ஐ.தே.க.ஏற்றுக் கொண்டு மையோன் முஸ்தபாவை அதன் அங்கத்துவராக்கியது. குறுகிய காலத்திற்குள் திகாமடுல்ல மாவட்டத்தில் இவர் செய்கின்ற பணிகளைப் புரிந்த எதிர்கட்சித் தலைவர் இவரை ஐ.தே.க.வின் செயற்குழு உறுப்பினராக நியமித்தார்.

திகாமடுல்ல மாவட்ட வாக்காளப் பெருமக்களே! அண்மைக்கால அரசியல் வரலாற்றில் மையோன் முஸ்தபாவின் சேவை இன, மத, பிரதேச வேறுபாடுகளைத் தாண்டிய ஒரு பொதுச் சேவையாகப் போற்றப்படுகின்றது.இந்தப் பணியினை எதிர்வரும் காலத்திலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு உங்கள் கரங்களில் தங்கியுள்ளது. மனித சுதந்திரத்தினையும், மனிதத்துவத்தினையும் என்றுமே மதித்து மனித சமூகத்தை உன்னத நிலைக்கு கட்டியெழுப்பி மக்களின் அறிவுக் கண்களைத் திறந்து, கல்வியை எமது சமூகத்தின் சொத்தாக மாற்றுவதுடன் வறுமைக்கோட்டினுள் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை தன்னிறைவுள்ள பொருளாதாரமாக மாற்றி எமது வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியங்களை அடைவதற்கு மையோன் முஸ்தபாவின் கரங்களை பலப்படுத்துவோமாக.

பொதுத் தேர்தலை எதிர்நோக்கி இருக்கின்ற மக்களே! நீங்கள் வாக்களிப்பதன் மூலம் ஐ.தே.கட்சிக்கு வெற்றிபெறச் செய்யுங்கள். அத்தோடு மட்டுமல்ல, இந்தப் பிரதேசத்திலே நல்லதொரு சமூக சேவையாளராக அதே நேரத்தில், படித்த பண்புள்ள மையோன் முஸ்தபா அவர்களுக்கும் உங்கள் வாக்குளை அளித்து அவரை பாராளுமன்றத்திற்கு அனுப்பி அதனூடாக இன்னும் பல சேவைகளை இந்த திகாமடுல்ல மாவட்ட மக்கள் பெறுவதற்கு உங்கள் ஒத்துழைப்பினை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம். இன்று நாம் அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.கட்சியை வெற்றியடையச் செய்வதன் மூலம் இழந்த எமது பிரதிநிதித்துவத்தை பெறமுடியும். மேலும் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி சமூகங்களுக்கிடையே ஒற்றுமை வளர வேண்டும் என்னும் நல்லெண்ணம் உள்ள மையோன் முஸ்தபாவை பாராளுமன்றம் செல்ல வைப்பதன் மூலம் நாம் இழந்த தலைமைத்துவத்தை மீண்டும் கட்டியெழுப்ப வழியமைக்க முடியும் என்பதால் ஐ.தே.கட்சியையும் மையோன் முஸ்தபாவையும் ஆதரிப்போம்.

வாழ்க நம் சமூகம். வாழ்க இன ஒற்றுமை.

மையோன் முஸ்தபா



சமூகங்களின் ஒற்றுமைக்கும் திட்டமிட்ட அபிவிருத்திக்கும்

அம்பாறை மாவட்ட மக்களின் தெரிவு.



மட்டக்களப்பு மாவட்ட அரச சேவை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 5வது வருடாந்தப் பொதுக்கூட்டம் "லேக்கு இன்" ஹொட்டலில் நடைபெற்றபோது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. இ. மோனகுருசாமிக்கு அவரின் சேவையைப் பாராட்டி அம்பாறை மாவட்ட அரசசேவை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பிரதிநிதியும். அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய ஜனாப் என்.எம். இஸ்மாயில் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் முதலாவது படத்திலும் கிராம உத்தியோகத்தர்களுக்கான காரியாலய முகாமைத்துவ போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சிறந்த கிராம சேவையாளராகத் தெரிவு செய்யப்பட்ட அரசசேவை கிராம உத்தியோகத்தர். சங்கத்தின் தலைவரும் செங்கலடி கிராம உத்தியோகத்தருமான திரு. கே. வாமதேவனுக்கு மட்டக்களப்பு கச்சேரி அலுவலக உதவியாளர் திரு. ப. கிட்ணப்பிள்ளை பொன்னாடை போர்த்துவதை இரண்டாவது படத்திலும்

3வது படத்தில். கூட்டத்திற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. இ மோனகுருசாமி உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

# பிறந்த திகதி தரும் யோகம்.

## ஜோதிடம் ஏப்ரல் -02

**ஏப்ரல் 2 – 11 – 20 – 29ம் தேதிகளில் பிறந்தவர்களுக்கான பலன்கள்:**

எண் 2 அதன் அதிபதி சந்திரன்.

ஏப்ரல் 2 - 11ம் தேதிகளில் பிறந்தவர்கள் வியாழனின் குணத்தையும், 20 - 29ம் தேதிகளில் பிறந்தவர்கள் செய்வாயின் குணத்தையும் உடையவர்கள் கற்பனை வளம் நிறைந்தவர்கள் எதிலும் புதுமை விரும்பிகள் எதிலும் தனக்கென ஒரு கொள்கையும், தனித்தன்மையும் கொண்டவர்கள் கட்டுப்பாட்டை விரும்பாதவர்கள் குடும்பவாழ்க்கையில் அடிக்கடி சில பிரச்சனைகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

ஒரேவேலையில் நிலைத்திருக்க விரும்பாதவர்கள் வாழ்க்கையில் பல நிறுவனங்களில் பணிசெய்யும் நிலையும், சயிற்தொழில்களும் செய்வீர்கள். அதனால் எதிலும் திருப்தி அடையாதவர்களே திருமணவாழ்க்கையிலும் பூரண திருப்தி ஏற்படாது.

எதையும் விரைவாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அரசியல் வாழ்க்கையிலே ஈடுபடும் வாய்ப்பு உண்டாகும் அதில் தலைவராகவும் தகுதி பெறுவீர்கள் மக்களின் மகத்தான ஆதரவு கிடைக்கும். இராணுவம் காவல்துறை இவற்றில் உயர்வான பதவியும் அமையும்.

சொல்லால். எழுத்தால். மற்றவர்களைத் தாக்கும் மனமுடையவர்கள். தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் இவற்றில் தலைமை ஏற்று நடத்தும் தகுதியும் பெறுவீர்கள் அதில் உங்கள் திறமைகளையும் புதுப்புதுத் திட்டங்களையும் வெளிப்படுத்துவீர்கள். அதனால் சிறந்த நிர்வாகி எனவும் புகழ்பெறுவீர்கள்.

சிறந்த எழுத்தாளராகவும் கலைஞர்ராகவும் புகழும் செல்வமும் பெறுவீர்கள் உங்களுடைய திட்டங்களை திறமையுடன் செயல்படுத்துவதால் செல்வத்துடன் புகழும் பெறுவீர்கள். சிறந்த உடல்வாகு கொண்டவர்கள் இரத்த சோகை, காய்ச்சல், உடலில் கட்டிகள். புண்கள்,பிற்காலத்தில் ஏற்படும். பல்லீறுகளில் கோளாறு, மூக்கில் சதை, தொண்டையில் ரொன்ஸில் காதில் கோளாறு, இவைகள் ஏற்படலாம். இந்நோய்களை ஆயுர்வேத மருத்துவ முறையால் முழுமையாகப் போக்கலாம். குளிர்ச்சியான பாணங்களையும் ஐஸ் பொருட்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.

சிறுசிறு விபத்துக்ளையும் சந்திக்கும் நிலை ஏற்படலாம். அதனால் வாகனம் செலுத்தும்போது அவதானம் தேவை இயற்கைக்கு மாறான மரனம் சிலருக்கு ஏற்படலாம்.

2-5-6-11-16-18-20-25-27-29 ம் தேதிகளில் எந்த ஆண்டு மாதமானாலும் யோகம் தரும் நாட்களாகும்.

உங்கள் வாழ்க்கையில் 2-7-8-11-16-18-20-25-27-29-34-36-38-43-45-52-54-61-63-70-72-ம் வயதுகளில் வாழ்க்கையில் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கூட்டெண் 2-7 ஆக வரும் எண்களையுடைய நபர்களுடன் ஏற்படும் உறவு நட்புக்கு உதாரணமாக அமையும்.

வாழ்க்கைத்துணை இருவருக்கும் இதே எண் அமையுமானால் மிக அதிர்ஷ்டம் பெற்றவர்கள்

வெள்ளைநிறம் தூய்மையின் சின்னம் அதுவே உங்களுக்கு யோகம் தரும் ஆடையாகும்.

நவரெத்திணங்களில் வெண்மையான முத்து மிகவும் யோகம் தரும்.

வே.தவராசா.

# களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்த 5 தமிழக மீனவர்கள் நீதிமன்றத்தால் விடுதலை

(நமது நிருபர்)

இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தடுப்புக்காவலில் இருந்து தம்மை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதமிருந்த 5 தமிழக மீனவர்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

1998 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக் கரையோரத்தின் இரணைதீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

இவர்களிடமிருந்து வாகன உதிரிப்பாகங்களும் படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. 'இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த கிளிநொச்சி பகுதிக்குப் பாதுகாப்புப் படையினரால் தடை செய்யப்பட்டிருந்த வாகன உதிரிப் பாகங்களை எடுத்துச் செல்ல முயன்றார்கள். என்றும், தடை செய்யப்பட்ட கடற்பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்தார்கள் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு, இவர்களுக்கு எதிராக 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இவர்கள் கைது செய்யப்பட்டதன் பின் ஒருமாதம் கழித்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு மேல் விசாரணைக்காகக் களுத்துறைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்கள்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை கடந்த 22 ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணை முடிவுறாமல் இழுத்தடிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, இவர்கள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததனால், இவர்கள் கடந்த வாரம் களுத்துறைச் சிறைச்சாலையில் தம்மை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்கள்.

இது தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றத்தின் கவனத்திற்கும், சட்டமா அதிபரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டதையடுத்து இவர்களை உடனடியாக வவுனியா மேல் நீதிமன்றத்திற்குக் கொண்டுவருமாறு நீதவான் எஸ். சிறீஸ்கந்தராசா ஆணையிட்டிருந்தார்.

இதன்படி திங்களன்று வவுனியா மேல் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்த பாலகிருஸ்ணன் கார்மேகம், கருப்பையா நவநீதன், பணியடுமை ரவிசேகர், முனியாண்டி கோவிந்தராஜ், தங்கவேல் இராஜேந்திரன் ஆகிய ஐந்து மீனவர்களின் சார்பில் 5 சட்டத்தரணிகள் ஆஜராகினார்கள்.

இவர்கள் ஐவரும் தமக்கு எதிரச்சாட்டப்பட்டிருந்த குற்றங்களை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்திருந்ததை யடுத்து, முதலாம், இரண்டாம், நாலாம், ஐந்தாம் எதிரிகளுக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் நீதிபதியினால் 6 மாதச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. மூன்றாம் எதிரியாகிய படகோட்டிக்கு எதிராக ஒவ்வொரு குற்றத்திற்கும் 9 மாதச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இவர்கள் ஐவரும் ஏற்கனவே இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்தைத் தடுப்புக்காவலில் கழித்துள்ளதைக் கவனத்திற் கொண்ட நீதவான் இவர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

நீதவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஆணையிட்டதன்படி, இவர்கள் ஐவரும் கொழும்பு மிஹிரானையில் உள்ள குடியேற்ற குடியகல்வு திணைக்களத்தின் தடுப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இதேவேளையில் இவர்களை தமிழகத்தில் உள்ள அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பி வைப்பதற்குரிய பிரயாண ஏற்பாடுகளைச் செய்வதற்காக நீதவானுடைய உத்தரவின்பேரில், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் வவுனியா மேல் நீதிமன்ற அதிகாரிகள் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

# "தடாகம்"

## நடாத்தும் சிறுவர்

(கிரான்)

சர்வேதச சிறுவர் தினத்தை முன்னிட்டு தடாகம் கிராமிய மக்கள் நிறுவன கோரளைப்பற்றுப் பிரதேசத்திலுள்ள முன்னிலைப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், சிறுவர்கள் இணைந்து நடாத்திய உள்ளூர் கழிவுப்பொருட்களைக் கொண்டு ஆக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி ஒன்று நேற்று இடம் பெற்றது.


அழகுசுப்பிரமணியம் சத்தியநாதன்

அரசியல் விடிவானில் ஓர் இளஞ்சூரியன்



தமிழர் விடுதலைக் கூட்டணி

மட்டக்களப்பு மாவட்டம்






பட்டிருப்பு தொகுதியை புதுப்பொலிவுடன் திகழ்வித்து. கொக்கட்டிச்சோலையில் சகல வசதிகள் கொண்ட பாடசாலையை உருவாக்கி கல்வித்துறை வளர்ச்சிக்கு வித்திட்ட

எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் வை ஆதரிப்போம்.

எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் தேசிய ஐக்கிய முன்னணி.





கிழக்குப்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வை.அருள்நந்தியின் மூன்று நூல்கள் வெளியிட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மனோ சபாரெட்ணம் விவசாயப் பீடாதிபதி கலாநிதி சி.இரவீந்திர நாத்திடம் இருந்து முதல் பிரதிகளைப் பெறுவதை முதலாவது படத்திலும்.நூலாசிரியர் உரை நிகழ்த்துவதையும் விஞ்ஞான பீடாதிபதி கலாநிதி த. ஜெயசிங்கம் மட்டக்களப்பு வலயபிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.சரவணபவன் விவசாய பொருளியல் தலைவர் என். நசீர் அகமட், சிரேஷ்ட விரிவுரையாளர் என். தட்சணாமூர்த்தி ஆகியோர் மேடையில் வீற்றிருப்பதை இரண்டாவது படத்திலும் விழாவில் வெளியிடப்பட்ட மூன்று நூல்களையும் மூன்றாவது படத்திலும் காணலாம்.

# 'பட்டம் பதவிக்காக தமிழர் வாக்களிக்க மாட்டார்கள்'

**-ஹாரிஸ்-**

(காத்தான்குடி நிருபர்-அன்ஸார்)

பொத்துவில் தொடக்கம் பருத்தித்துறை வரையிலான முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கியதான அடையாள மிடப்பட்ட முஸ்லிம் மாகாணத்தை வென்றெடுப்போம் என்ற கோசங்களின் பின்னால் நாம் எல்லோரும் அள்ளுண்டுபோனோம். ஆனால் நமது முஸ்லிம் தலைமைத்துவம் அற்ப சலுகைகளுக்காக தனது விடுதலைப்போராட்டத்தின் பாதையை மாற்றிக் கொண்டது.

இவ்வாறு கடந்த புதன் கிழமை காத்தான்குடியில் நடைபெற்ற வடக்கு கிழக்கு முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஜனாப் ஹாரிஸ் தல்லைமயுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்துக் கொண்ட இக்கூட்டத்தில் ஹாரிஸ் தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது:

பாராளுமன்றக்கதிரைகள்,அமைச்சர் பதவிகள் மக்களுக்கு பயன் தராத பல அபிவிருத்தித் திட்டங்கள் இவைகள்தானா முஸ்லிம் மக்களின் இலக்கு? இவைகளுக்குத்தானா நாங்கள் பல உயிர்தியாகங்களை புரிந்தோம்,அனாதைகளாக, அகதிகளாக ஆக்கப்பட்டோம்.முன்னர் கூறப்பட்ட முஸ்லிம் மாகாணத்தை வென்று எடுப்பதற்காக எத்தனை சதவீதம் எமது சமூகம் வழி நடத்திச்செல்லப்பட்டது. இந்த வடக்கு கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் வாக்களினால் பாரளுமன்றம் சென்று பேரின வாத சக்திகளுக்கு துனை போனதால் முஸ்லிம் தேசியம் என்ற தாய்க்கு அள்ளி வழங்கப்பட்ட அபிவிருத்தி திட்டம் ஏன்ற பெயரிலான ஆபரணங்கள் அணிய ப்பட்டிருக்கின்றன. இவைகளை கண்டு நாம் சந்தோசப்படுகிறோம்.ஆனால் முஸ்லிம் தேசியம் இன்றோ நாளையோ முழங்கால்களும் கழட்டப்படும் ஆபத்து ஏற்படப்போகிறது.

ஆனால் இந்த வகையில் நமது சகோதர சமுகமான தமிழ் சமூகம் இந்த அபிவிருத்தி மாயைகளுக்கெல்லாம் அடி பணியாமல் தமது விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச்செல்கிறது.என்றார்.

வடக்குகிழக்கு முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்களான எம்.எல்.ஏ அஸீஸ்,வீ.பி.அஸீஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

# தமிழ்,முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவன் நான்

**ஹிஸ்புல்லாஹ்-**

கடந்த பொது தேர்தல் காலத்தில்நாங்கள் எத்தகைய அபிவிருத்தியையும் செய்ய மாட்டோம் ஆனால் மக்களுடைய பாது காப்பிற்கும், அவர்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் நாம் எத்தகைய தியாகத்தையும் செய்யத்தயாராக இருக்கிறோம் என்று சில அரசியல்வாதிகள் பேசிவந்தனர்.

நான் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டக்காலத்தில் இனமுரண்பாடுச் சக்திகளின் பிடியினுள் சிக்குண்டு தமிழ் முஸ்லிம் மக்கள் ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டிருந்தார்கள்.அவ்வேளையில் நான் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இருந்த கசப்புணர்வை நீக்கி இரு சமூகத்தினரிடையே உறவை வளர்த்தெடுக்கப் பாடுபட்டிருகிறேன் என்று காங்கேயன் ஓடையில் புதிதாக 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள லைத்திய சாலையைத் திறந்து வைத்து தபால் தந்தி தொலைத் தொடர்புகள் சாதன பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்ஹிஸ்புல்லாஹ் உரையாற்றினார்.

கடந்த 22.09.2000 ம் திகதி அன்று இவ்வைபவம்றிபாய் மௌலவி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அவ்வேளை பிரதி அமைச்சரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி யிலிருந்து காங்கேயன் ஓடையில் உள்ள நான்கு மதுரசாக்களுக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தளாபாடங்களையும் பிரதியமைச்சர், கையளித்தார். அமைச்சருடன் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் மண்முனைப்பற்று. முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர், பள்ளிவாசல்களின் தலைவர்கள்,பாடசாலை அதிபர்கள் மற்றும் பல அதிகாரிக.ளும் கலந்துக் கொண்டனர்.

# தனிநாட்டுக் கோரிக்கையை முதலில் எதிர்த்தவர் எஸ்ஜேவி

**- காங்கிரஸ் வேட்பாளர் -**

கவிஞர் இரா.தவராஜா

மாறிமாறி வரும் அரசுகள் தமிழருக்கு சுயாட்சியை வழங்கினால் பின்பு சுயாட்சிகளைக் கொண்ட ஒன்றி யமாகிவிடும அதனால் சிங்கள ஏகாதிபத்தியம் நிலை நிறுத் திவரும் தங்களது தனித்துவம், தன்னாதிக்கம் இல்லாமல் போய் விடும் என்பதனால்தான் இப்போராட்டம் நீடித்துக்கொண்டேயிருக்கிறது. விட்டுக்கொடுப்பதும் ஒரு பெருந்தன்மை என்பதை சிங்கள ஏகாதிபத்தியம் எப்போது ஏற்றுக் கொள்கிறதோ? அப்போதுதான் அந்நிலை மாறும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் கவிஞர் இரா.தவராஜா ரமேஸ் புரத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கூறினார்.

அவர் மேலும் அங்கு கூறுகையில் தென் ஆபிரிக்காவின் விடுதலைக்கு பாடுபட்ட நெல்சன் மண்டேலா கூறினார். நெருப்பை நெருப்பினால்தான் சந்திக்க வேண்டும் அந்த நிலை இங்கும் நிலவுகின்றது. போராடவேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது அதனை தவிர்க முடியாது என்பதை மண்டேலா சுயசரிதம் எடுத்துக் கூறுகிறது.

இங்கு போராட வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு அது விட்டுக்கொடுப்பு இல்லாமைதான் காரணமாகும்.

தமிழருக்காக பாடுபடும் கட்சி என்று தங்களைக் கூறிக்கொள்வோர் காலத்துக்கு காலம் தங்களது கொள்கைகளை மாற்றிக் கொண்டதால் தான் தமிழருக்கு இந்நிலை என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

முதன்முதல் ஈழத்தை எதிர்த்தவர் எஸ்.ஜே.வி செல்வநாயகம்தான். வவுனியா தொகுதியின் முன்னாள் பிரதிநிதி அடங்காத்தமிழன் என வர்ணிக்கப்படும் திருவாளர் சுந்தரலிங்கம் தனிநாட்டுக்காக போராடியவர் அவருடன் அவரது தனிநாட்டுக் கொள்கைக்கு எதிராக சமஸ்ட்டிக்கட்சி போட்டியிட்டது. பின்பு அதே தமிழ் நாட்டுக்கொள்கையை தமிழ் மக்கள் முன் செல்வநாயகம் அவர்களே முன் வைத்தார்.

அதன் பின்பு 1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தனி நாட்டுக் கொள்கையுடன் செ.இராசதுரை மட்டக்களப்புத்தேர்தல் தொகுதியில் நின்ற போது அவரை எதிர்த்து சமஸ்டிக் கட்சியில் காசி ஆனந்தன் நிறுத்தப்பட்டார் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று ஆன பின்பு அங்கு தமிரசுக்கட்சிக்கு என்ன வேலை? என்று தவராஜா கேட்டார்.

# தேசியமுன்னணிக்கு அளிக்கும் வாக்குகள் மூன்று குறிக்கோள்கொண்டது

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தேசிய முன்னணிக்கு அளிக்கும் வாக்குகள் மூன்றுவிதமான குறிக்கோள்களை நிறைவேற்றும்.முதலாவதாக உங்களது பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்யும். அடுத்ததாக அமைச்சர் இருவரை நிர்ணயிக்கும் அனைத்திற்கும் மேலாக ஸ்ரீலங்கா முஸ்லிங் காங்கிரஸிற்கும் பொருத்தமான தலைவரைத் தேர்ந்தெடுக்க உதவுமென காங்கிரஸின் தேசியக் கொள்கை பரப்புச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான பஸீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஏறாவூர்-ஐயங்கேணியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்திலேயே அவர் இதனைக்கூறினார்.

மேலும் பஷீர் சேகுதாவுத் பேசியதாவது: மறைந்த அமைச்சர் தலைவர் அஷ்ரப் ஏறாவூர் முஸ்லீம்கள் மீது அளப்பரிய அன்பு வைத்திருந்தார்.

ஏறாவூர் மக்களில் 1400பேருக்கு மானியக் கொடுப்பனவை அள்ளித்தந்தார். இந் மக்கள் சுமார் ஐயாயிரம் வாக்குகளை மாத்திரமே எமது கட்சிக்களித்தார்கள் ஆனால் சுமார் 12ஆயிரம் வாக்களித்த காத்தான் குடியினருக்கோ அல்லது ஓட்டமாவடிக்கோ இவ்வளவு அதிகத் தொகை மானியமாக வழங்கப்படவில்லை

எனவே அந்த மாமனிதருக்கு நன்றியுடையவராகவும் அவரின் கொள்கைகளைப் பற்றி நடக்கக்கூடிய வர்களாகவும் நாம் வாழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி வந்தால் புனர்வாழ்வு நிதியம் பற்றி விசாரணை நடக்கும்

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு அமைச்சருக்கு சொந்தமான நிதியம் வீண் விரயம் செய்யப்படுவது குறித்து விசாரணை நடத்துவதற்கென ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்கும் போது ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமென மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான அலிஷாஹிர் மௌலான தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதான வீதியில் நேற்றிரவு அல்ஹாஜ் எம்.எஸ் நசீர் தலைமையில் நடை பெற்ற பிசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார்.

அலிஷாஹிர் மௌலான மேலும் பேசுகையில் தற்போது புனர்வாழ்வு கொடுப்பனவுகள் அரசியல் லாபங்களை கருத்தில கொண்டு வழங்கப்படுகின்றன. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் தேசிய ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரம் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக அலிஷாஹிர் மௌலான குற்றம் சாட்டினார்.

புனர் வாழ்வு அமைச்சின் உத்தியோகபூர்வ கடிதம் அனுப்பப்பட்டு இந்த வாகனங்கள் தம்மிடம் உள்ளதாகவும் அலிஷாஹிர் மௌலானா சுட்டிக்காட்டினார். இது குறித்து தேர்தல்கள் ஆணையாளருக்குப் புகார் செய்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் தேர்தல் வேட்பாளர்களான ராஜன் சத்திமூர்த்தி சட்டத்தரணி எம்.எல். அப்துல் மர்சூக், ஸ்ரீராம் குருக்கள் ஆகியோரும் உரையாற்றினர்.






அண்மையில் சர்வதேச கழகமாகிய லியோ கழகத்தினர் மட்.போதனா வைத்தியசாலை சிறுவர் விடுதிக்கு 10 நாற்காலிகளையும் 20 யார் Rexine Rubber Sheet ஐயும் டாக்டர் திருமதி. எஸ். கனேசனிடம் கையளிப்பதனை இங்கு படத்தில் காணலாம்.

## பாடசாலை விளையாட்டுப்போட்டி

(வெல்லாவெளி நிருபர்)

அகிலஇலங்கை பாடசாலை களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த 28ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்றது.

இதில் மட்/தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகள் 100மீற்றர், 400மீற்றர்நீளம் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கான பயிற்சியினை க.சசிகரன் ஆசிரியர் வழங்கியிருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது

## பெண்களுக்கான ஹொக்கி போட்டி

(பிரகாஸ்)

பெண்களுக்கான ஒலிம்பிக் ஹொக்கிப்போட்டியில் இறுதிப் போட்டியில்விளையாட அவுஸ்திரேலியாவும். ஆஜன்டினா வும் தகுதி பெற்றுள்ளன. நேற்று நடைபெற்ற அரை இறுதிப்போட்டி ஒன்றில் சீனாவை எதிர்த்து அவுஸ்திரேலியா 5-0 என்ற நிலையில்சீனாவை தோற்கடித்தது. மற்றைய அரை இறுதிப்போட்டியில் 7க்கு 1என்ற கணக்கில் ஆஜன்டீனா வெற்றி கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. இறுதிப்போட்டி நாளை மறுதினம் நடைபெறும்என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

## 177வது ஆண்டு நிறைவு

(எஸ்.எஸ்.குமார்)

திருகோணமலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் 177வது ஆண்டு நிறைவு கொண்டாட்டம் கடந்தசனிக்கிழமை நடைபெற்றது.

இதன் ஓர் அங்கமாக மாணவர்கள் மத்தியில் வீதி ஓட்டப்போட்டிஒன்று நடாத்தப் பட்டது. 85 மாணவர்கள் பங்கு கொண்டு 83 மாணவர்கள் போட்டியினை நிறைவு செய்தனர். முதலாம்இடத்தினை சு.புருசோத்தமன் இரண்டாம் இடம் ஆ. புஸ்பராஜா மூன்றாம் இடம் மு. ஜனந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

வடக்கு கிழக்கு மாகாண சிறு கைத்தொழில் திணைக்கள பணிப்பாளர் செல்வின் 'இரேனியஸ் பிரதம அதிதியாக பங்கேற்று போட்டியினைஆரம்பித்து வைத்தததோடு வெற்றி பெற்றோருக்கான பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிவைத்தார். திரு.சு. விக்னேஸ்வரன் ஆசிரியர் அவர்கள் போட்டிஒழுங்குகளை மேற் கொண்டார்.

## ஹொக்கிப் போட்டியில் முதல் இடத்தைப்பிடித்த இந்தியா தற்போது மூன்றாமிடம்

## பதக்கம் கிடைக்குமா?

(பிரகாஸ்)

சிட்னி ஒலிம்பிக்போட்டியில் திறமையாக விளையாடி வந்த இந்தியா அணி போலந்துடன் தோல்விகண்டது. ஹொக்கிப் போட்டியில்பலராலும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியா தற்போதைய தரவுகளின்படி 3ம் இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆசியநாடான பாகிஸ்தான் ஒலிம்பிக் சம்பியனான ஒல்லாந்தை2-0என்ற அடிப் படையில் தோற்கடித்தது. இத்தோல்வியை தாங்க முடியாத ஒல்லாந்து வீரர்கள் மைதானத்தில் கண்ணீர்மல்கியவாறு காணப்பட்டனர். காரணம் ஒல்லாந்து அணி ஜெர்மனி உடனான போட்டியில் சமபுள்ளிகளை பெற்றிருந்தனர்.இதன் பின் ஜெர்மனி பரித்தானியாவை எதிர்த்தாடியது. பாக்கிஸ்தான் ஒல்லாந்துடன் விளையாடிஒல்லாந்தை தோற் கடித்தது.

இத்தோல்வியை அடுத்து நாடு திரும்ப தீர்மானித்தனர். என்றாலும்அரை மணித்தியாலயத்தில் கிடைத்த தகவலின் பின்னர் அழவேண்டிய வீரர்கள் ஜேர்மனிய வீரர்கள் ஆனார்கள். சந்தோஷப்பட வேண்டிய வீரர்கள் ஒல்லாந்து வீரர்களும் பாக்கிஸ்தானிய வீரர்களுமானார்கள்.

பாகிஸ்தானும் ஒல்லாந்தும் பிரிவு Aயில் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரிவுBயில் அவுஸ்திரேலியாவும் தென் கொரியாவும் எதிர்த்தாடியது இந்த இரண்டு நாடுகளுமே பதக்கத்தை குறிவைத்த நாடாகும்.

அதுபோலவே இந்தியா போலந்தை வெற்றி பெற்றால் மாத்திரமே இறுதிப்போட்டிக்கு தெரிவாகும் வாய்ப்புடன் ஆட ஆரம்பித்தன. இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியாவின் டிலிப்குமார் ரிக்கி, 52 நிமிடத்தில் பனால்ட்டி கோணர் அடிப்படையில் இந்தியா கோல் ஒன்றை பெற்றது. இதன் பின் இந்திய வீரர்களும் ரசிகர்களும் மீண்டும் தங்கத்தை சவீகரிக்கலர்ம்என்று இருக்கையில் 68வது நிமிடத்தில் ஒல்லாந்தை சேர்ந்த தோமஸ் சிச்சி இந்தியாவுக்கு எதிராக கோல் ஒன்றை போட்டு அணியை சரி சமநிலை அடையச் செய்தார். இதனால்இந்தியரவின் தங்கப் பதக்க கனவு தரைமட்டமாகியது.

இதன் அடிப்படையில் பிரிவு Bயில் அவுஸ்திரேலியா தென் கொரியா நாடுகள் தெரிவுசெய்யப்பட்டன. இதன் அடிப்படையில் முடிவுகளைப் பார்க்கும் போது பிரித்தானியா 2க்கு 1என்று ஜேர்மனியை தோற்கடித்தது. மலேசியா 1க்கு 1என்ற நிலையில் கனடாவுடன் சமநிலையில் உள்ளது குழு Bயில்பாக்கிஸ்தான் 9புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்திலும், நெதர்லாந்து 8புள்ளிகளோடு இரண்டாம் இடத்திலும், ஜேர்மனி 8புள்ளிகளோடு மூன்றாம் இடத்திலும் உள்ளன. அடுத்து 5புள்ளிகளுடன் பிரித்தானியா, 4புள்ளிகளுடன் மலேசியா 3புள்ளிகளுடன் கனடா உள்ளன.

பிரிவுAயில் அவுஸ்திரேலியா2க்கு1என்று தென் கொரியாவை தோற்கடித்தது. இதன் அடிப்படையில் பிரிவுAயில் 11புள்ளிகளைபெற்று அவுஸ்திரேலியா முதலாவது இடத்திலும், தென் கொரியா 8புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும். இந்தியா 8புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

இந்தியாவை தென் கொரியா தோற்கடித் தமையினால் அரை இறுதிப்போட்டிக்கு தென் கொரியாதயாராகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதனைஅடுத்து அஜந்தீனா 5புள்ளிகளுடனும் போலந்து 5புள்ளிகளுடனும் ஸ்பெயின் 2புள்ளிகளுடனும் இருக்கிறது. பிரித்தானியா. ஜெர்மனி. ஆஜந்தீனா. போலந்து. கனடா. ஆகிய நாடுகள் 5,6,7,8,9 என்ற நிலையில் உள்ளன.இப்போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

ஹொக்கியில் அதிக கோல்களை போட்ட வீரர் வரிசையில் அஜந்தீனாவை சேர்ந்த யோஸ்லொம்பி10 கோல்களையும், பாக்கிஸ்தானின் சொகாரபாஸ் 7கோல்களையும். போலந்தை சேர்ந்த நியுற்றர் மிக்குவா 5 கோல்களையும் பெற்றுக் கொண்டனர்.

## வாசகர் நெஞ்சம்

### வீதியருகே மண்டபம் இருப்பதால் நிகழ்ச்சிகளுக்கு இடையூறு

கல்முனை பிரதேச மக்களின் நன்மை கருதி அமைக்கப்பட்டுள்ள கல்முனை நகர மண்டபம் பிரதான வீதியின் அருகே அமைந்துள்ளதால் அவ்வீதியில் செல்லும் வாகனங்களின் ஒலி அம்மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை நகர மண்டபத்தில் மாணவர்களிற்கான கல்விக்கருத்தரங்குகள், பயிற்சி கருத்தரங்குகள், மீட்டல் வகுப்புக்கள் உட்பட பல கருத்தரங்குகளும், நிகழ்ச்சிகளும் நடைபெறுவதால் அவற்றில் கலந்து கொண்டு அனேகமானோர் பயனடைந்து வருவதாகவும், அம்மண்டபம் கல்முனை பிரதேசத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை பிரதேசம் நகர சபையாக தரமுயர்த்தப்பட்டிருக்கும் இவ்வேளையில் நகர சபை மண்டபம் அமைந்துள்ள பகுதியில் குறிப்பிட்ட எல்லையில் "ஒலி எழுப்பத்தடை" எனும் வாசகங்களை தாங்கிய பதாகைகளை பொருத்துவதன் மூலம் அம்மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு ஓரளவேனும் இடையூறு ஏற்படாதவாறு தவிர்க்க முடியுமெனவும் தெரிவிப்பதோடு, நகர சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து உரிய நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமெனவும் அம்மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பலர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

*ஏ.எஸ்.எம்.முஸாகித்*
*கல்முனை*

### அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் குடிநீர்ப் பிரச்சினை

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பெரும் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முகமாக "பவுசர்" மூலம் நீர் வழங்குமாறு அரசாங்க அதிபர் எல்.எஸ்.சி.சிறிவர்த்தனாவிடம் கலாசாலையின் அதிபர் எம்.எஸ்.நைனா மொகமட் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடும் வரட்சி என்றுமில்லாதவாறு இப்பகுதியில் நிலவுவதனால் கிணறுகளின் நீர்மட்டம் மிகக் குறைந்தே காணப்படுகிறது.

ஏறத்தாழ 650 ஆசிரிய பயிலுனர்கள் இந்த நீர்த்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே கூடிய விரைவில் "பவுசர்" மூலம் நீர் வழங்கி ஆசிரிய பயிலுனர்களின் நீர்த்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*அரவிந்தன்*





மட்டக்களப்பு இலங்கை வங்கி 56 அதிர்ஷ்டசாலிகளுக்கு றன் கினும் வாசனா, றன் மசுரன் வாசனா, ஆகிய பரிசுத்திட்டங்களின் கீழ் காஸ் அடுப்புகள், சுவர் கடிகாரம், பிரயாணப்பை, பணவைப்பு ஆகியவற்றை அண்மையில் வழங்கியது. படத்தில் கிளை முகாமையாளர் ஆர்.ஸ்ரீபத்மநாதன், உதவி முகாமையாளர்கள் வீ.சபாநாதன், ஜே.வீ.ராஜ்குமார் ஆகியோர் பரிசில்கள் வழங்குகின்றனர்.

## கோல் ஊன்றிப் பாய்தலின் பதக்கத்தை நழுவவிட்ட சேயிபுக்கா

(பிரகாஸ்)

சிட்னி ஒலிம்பிக்கில் இது வரை காலமும் கோல் ஊன்றிப் பாயும் போட்டியில் பதக்கத்தை வென்ற சேயிபுக்காஇம்முறை முதற் கட்டமான உயரம்பாய்தல் தெரிவுப்போட்டியில் 5.70 உயரத்தைமூன்று தடவைகளும் தட்டி பதக்க வாய்ப்பை இழந்துள்ளார். 36 வயதுடைய புக்கா கடந்த சில வாரங்களாக உடல் நிலை பாதிப்புக்குள்ளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# செல்லையா இராசதுரை மட்டக்களப்பிலேயே வசித்து வருகிறார்.

(காத்தான்குடி நிருபர்)

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் எம்மை எப்படியும் போட்டியில் இருந்து விலக்கி விட வேண்டும் என்ற நோக்குடன் பல அரசியற் கட்சிகள் இன்று செயற்பட்டு வருகின்றன. இவர்களது கனவு ஒரு போதும் நனவாகப் போவதில்லை. எமது கட்சியின் வேட்பு மனுவை தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கில் நாம் நிச்சயம் வெற்றியடைவோம். இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடியில் நடைபெற்ற தேசிய ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.**

முபீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து பிரதியமைச்சர் பேசுகையில்,

தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பு மனுவில் இடப்பட்டிருக்கும் செல்லையா இராசதுரை, அகிலேஸ்வரன் ஆகியோர்களின் கையெழுத்துக்கள் போலியானவை என்ற அடிப்படையிலேயே இந்த வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. ஆனால் இவை பொய்யான குற்றச் சாட்டுக்களாகும். ஏனெனில் செல்லையா இராசதுரை என்பவர்

## ஹிஸ்புல்லாஹ்

இப்போதும் மட்டக்களப்பு மத்திய வீதியில் வசித்து வருகிறார். இவர்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல் மலேசியாவில் வசித்து வரும் முன்னாள் அமைச்சர் செல்லையா இராசதுரை அல்ல. அதே போல் அடுத்த வேட்பாளரான அகிலேஸ்வரன் நாங்கள் கையெழுத்து வாங்கும் போது கட்டு கஸ் தோட்ட பொலிஸ் நிலையத்தில் இருந்தார். எனவே கையெழுத்தை பெறுவதற்கு சிறைச்சாலை அதிகாரியின் அனுமதி தேவை யில்லை. இவர் எதிர்வரும் திங்கட் கிழமை விடுதலை செய்யப்பட விருக்கிறார்.

எதிர்வரும் 4ம் திகதி செல்லையா இராசதுரை, அகிலேஸ்வரன் ஆகியோருடன் நீதிமன்றம் சென்று நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம் எனத் தெரிவித்தார்.

## வடமராட்சி .......

கான் வினியோகப்பாதை தொடர்ந்து துண்டிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன.

இதேவேளை தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளின் படையணியினருக்கு வன்னிப் பிரதேச மக்கள் வலய வீதியாக உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்தள வேலைகளை விடுதலைப்புலிகளின் சிறப்புஎல்லைப்படையினரும், எல்லைப் படையினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடையும் விடுதலைப் புலிகளுக்கு பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இரத்ததானம் வழங்கி வருகின்றனர் எனவும்

நேற்றுமுன் தினம் விமானப் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் தரப்பில் அதிக பாதிப்பு ஏற்படவில்லை. காரணம் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னமே மக்கள் மேற்கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஹிஸ்புல்லாஹ் .....

இச்சம்பவத்தின் போது நிசேவ் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கருணாரெத்தின(26) விஜய குணவர்தன(32) எம்.ஏ.ரசிக்(29) ஆகியோரே காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய கருவி மூலம் வாக்கு சீட்டில் அடையாளம்

(நமது நிருபர்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்குச் சீட்டுக்கள் வாக்காளர்களுக்கு வழங்குவதற்கு முன்பு கருவி ஒன்றின் மூலம் வாக்குச் சீட்டில் அடையாளமிடப்படுமென மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபடும் அதிகாரிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு இது தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வாக்குச் சீட்டு வாக்காளருக்கு வழங்கமுன்பு துவாரமிடப்பட்டு வழங்கப்பட்டது. இம்முறை பயன்படுத்தப்படும் கருவி எத்தகையது என்பது தொடர்பாக இரகசியமாகவே வைக்கப்படும். இக கருவி மூலம் 2500 வாக்குகள் அடையாளமிடமுடியும் எனவும் தெரியவருகிறது

## ஒருவர் .....

வாக்காளர் அட்டைகள் எதிர்பாராத விதமாக காணமல் போய் உள்ளன என அம்பாறை தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தை இடுத்து தேர்தல் அத்தாட்சி அலுவலகரின் முறைப்பாட்டிற்கு இணங்க அம்பாறை பொலிசார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்

## முன்னூறு .......

உள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி கிழக்கில் இருநது மககள வெளியேறுவதறகு படையினர் அனுமதி மறுத்து வந்ததைத் தொடர்ந்து மனித நேய அமைப்புக்கள். அரசியற் கட்சிகள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மேற்படி அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## துவறுதவாக.......

டைந்துள்ளார்.

சத்துருக் கொண்டானைச் சேர்ந்த மாமாங்கம் மோகன்(30) என்பவரே காயமடைந்தவராவர் இவர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.




## இருதயபுரத்தில் மின்னல் தாக்கியது


(பற்றி)

சனியன்று பி.ப.3.05 மணியளவில் மட்டக்களப்பு இருதயபுரம் மேற்கு 9ம் குறுக்கு வீதியில் உள்ள வீடொன்றின் வளவினுள் பெரும் ஓசையுடன் மின்னல் தாக்கியது. அவ்வளவினுள் உள்ள உயரம் குறைவான தென்னை மரமொன்று தீப்பற்றியெரிந்தது. வீட்டின் கூரைகளில் இருந்து நீர் ஊற்றி மக்கள் தீயை அணைக்க முயற்சி செய்தனர்.

மின்னல் தாக்கிய போது ஏற்பட்ட பாரிய இடியோசையினால் கட்டிடங்கள் அதிர்ந்தன. குழந்தைகள் அலறிக் கொண்டு மேசைகளின் கீழ் ஒழிந்து கொண்டனர்.

இதற்கிடையில். சூறாவளி அபாயம் பற்றிய எச்சரிக்கையினால் மட்டக்களப்பு மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. 1978ம் ஆண்டின் சூறாவளியின் தாக்கத்தை அவர்கள் இன்னும் மறக்கவில்லை.





பொதுஜன ஐக்கிய முன்னணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண அபிவிருத்திக்கு
பொதுஜன ஐக்கிய முன்னணியின்
முதன்மை வேட்பாளர்
கே. எஸ் கணேசமூர்த்தி அவர்களுக்கு
வாக்களிப்போம் !



உடன் தேவை

Adobe PeagMeker 6.5இல் தமிழ்டைப்செட்டிங் மற்றும் பக்க வடிவமைப்பு வேகமாகச் செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. தகுதியானவர்கள் தகுந்த அத்தாட்சிபத்திரங்களுடன் எதிர்வரும் 04-10-2000 புதன் அன்று காலை 10 மணிக்கு தினக்கதிர் காரியாலயத்துக்கு வரவும்

நிர்வாகி
தினக்கதிர்





வீணை



ஈ.பி.டி.பி

நேர்மையான அர்ப்பணிப்பு!
சோர்வின்றி தொடரும் முயற்சி!
சோதனையால் கலங்காத் தெளிவு!
வீணைக்கே வாக்களிப்போம்!


இப்பத்திரிகை வேல்ட் வொயில் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.